<u>வெளிநாட்டிலுள்ள நெருங்கிய உறவினர்களிடமிருந்து பெறும் கடன்</u>
**A.P. (DIR Series) சுற்றறிக்கை எண்.24 (செப்டம்பர் 27, 2003)**

**இந்திய ரிசர்வ் வங்கி**
**அந்நியச் செலாவணி கட்டுப்பாட்டுத்துறை**
**மைய அலுவலகம்**
**மும்பை 400 001**

செப்டம்பர் 27, 2003

<u>A.P.(DIR Series) சுற்றறிக்கை எண் 24</u>

**அங்கீகரிக்கப்பட்ட அந்நியச் செலாவணி வர்த்தகர் அனைவருக்கும்**

அன்புடையீர்,

<u>வெளிநாட்டிலுள்ள நெருங்கிய உறவினர்களிடமிருந்து பெறும் கடன்</u>

அங்கீகரிக்கப்பட்ட வணிகர்கள் கவனத்திற்கு:

அறிவிப்பு எண்.FEMA 3/2000 RB. மே 3, 2000 தேதியிடப்பட்டதில் விதிமுறை எண் 6ல் பாரா(iv)ல் சொல்லியபடி அதில் குறிப்பிட்டுள்ள கட்டளைகளுக்குட்பட்டு ஒரு இந்திய குடியிருப்பாளர்கள், அயல் நாட்டிலுள்ள தனது நெருங்கிய உறவினர்களிடமிருந்து அமெரிக்க டாலர் 2,50,000 அல்லது அதன் மதிப்புக்குமிகாமல் கடனாக வாங்கிட விண்ணப்பத்தின் பேரில் ரிசர்வ் வங்கி அனுமதிக்கிறது.

2. மேலும் தாராளமயமாக்கவும் நடைமுறையிலுள்ள எளிமைப்படுத்தவும் இந்திய ரிசர்வ் வங்கி அறிவிப்பு எண்.FEMA 75/2002 RB.ஐ நவம்பர் 1, 2002ல் தேதியிட்டு வெளியிட்டது. அதன்படி இந்திய குடியிருப்பாளரான தனிநபர் அமெரிக்க டாலர் 2,50,000 அல்லது அதன் மதிப்புக்குமிகாமல் அயல்நாட்டிலுள்ள தனது நெருங்கிய உறவினரிடமிருந்து பின்வரும் கட்டளைகளுக்குட்பட்டு கடன் வாங்கலாம்.

i. அந்த கடனின் குறைந்தபட்ச முதிர்வுகாலம் 1 வருடம்.

ii. அந்த கடன் வட்டியில்லாதது

iii. சாதாரண வங்கி வாய்க்கால்கள் மூலமாக உள்முகமாக அனுப்பப்பட்ட அயல்நாட்டுப் பணமாகவோ, அல்லது குடியிருப்பாளரல்லாத கடன் தருபவரின் NRE/FCNR(B) கணக்கில் பற்று வைக்கப்பட்டோ கடன் தொகை பெறப்படலாம்.

***விளக்கம்:***

நெருங்கிய உறவினர் என்பதற்கான விளக்கம் கம்பெனி சட்டம் 1956ன் சட்டப்பிரிவு எண் 6ல் குறித்துள்ள உறவினர் விளக்கப்படி கொள்ளப்படும்..

3. அங்கீகரிக்கப்பட்ட வணிகர்கள் இந்த சுற்றறிக்கையில் கருத்துக்களை தத்தம் குழு சார்ந்த முகவர்கள் கவனத்திற்குக் கொண்டு செல்வாராக.

6. இந்தச் சுற்றறிக்கையில் அடங்கியுள்ள கட்டளைகள் யாவும் FEMA 1999 (42 of 1999) ன் சட்டப்பிரிவு எண் 10(4) மற்றும் சட்டப்பிரிவு எண் 11(1)ன் கீழ் வெளியிடப்படுகிறது.

தங்கள் உண்மையுள்ள

கிரேஸ் கோஷி
தலைமைப் பொது மேலாளர்

**இந்திய ரிசர்வ் வங்கி**
**அந்நியச் செலாவணி கட்டுப்பாட்டுத்துறை**
**மைய அலுவலகம்**
**மும்பை 400 001**

**நவம்பர் 1, 2002**

**<u>அறிவிப்பு எண். FEMA.75/ 2002 RB</u>**

அந்நியச் செலாவணி கண்காணிப்புச்சட்டத்தின் FEMA 1999 (42 of 1999) ல் சட்டப்பிரிவு எண் 6 (உட்பிரிவு 3)ன் சட்டவிதிக்கூறு (d) மற்றும் சட்டப்பிரிவு எண் 47(2)ன்படி அளிக்கப்பெற்ற அதிகாரத்தை செலுத்துமுகமாகவும், அறிவிப்பு எண். FEMA.3/2000 RB மே 3, 2000 தேதியிடப்பட்டதின் கருத்துக்களின் பகுதியளவு மாற்றங்களின் மூலமாகவும் அவ்வப்போது திருத்தியமைத்தும் ரிசர்வ் வங்கி பின்வரும் திருத்தங்களை அந்நியச் செலாவணி கண்காணிப்பு (Foreign Exchange Management) அயல்நாட்டு நாணயக்(கடன் வாங்குதல்/ கொடுத்தல்) விதிகள் 2000 அமல்படுத்தியுள்ளது.

1.
   **a.** இந்த விதிமுறைகள் அந்நியச் செலாவணி கண்காணிப்பு (அயல்நாட்டு நாணயக்(கடன் வாங்குதல்/கொடுத்தல்) விதிகள் 2002 என்று அழைக்கப்படும்.
   **b.** அரசாணை அறிவிப்பு இதழில் பிரசுரிக்கப்பட்டதிலிருந்து இவை அமலுக்கு வரும்.

2. அந்நியச் செலாவணி கண்காணிப்பு (அயல்நாட்டு நாணயக் (கடன் வாங்குதல்/கொடுத்தல்) விதிகள் 2000ல்

(i)விதிமுறை எண் 5, உட்பிரிவு விதிமுறை(5)ன்பின், பின்வரும் உட்பிரிவுவிதிமுறை இணைக்கப்படுகிறது.

“ (6) இந்தியாவிலுள்ள தனிநபர் குடியிருப்பாளர் அயல்நாட்டிலுள்ள தனது நெருங்கிய உறவினரிடமிருந்து பின்வரும் கட்டளைகளுக்குட்பட்டு அமெரிக்க டாலர் 2,50,000 அல்லது அதன் மதிப்புக்குமிகாமல் கடன் வாங்கலாம்.

1) அந்த கடனின் குறைந்தபட்ச முதிர்வுகாலம் ஒரு வருடம்.

2) அந்த கடனுக்கு வட்டி கிடையாது.

3) வழக்கிலுள்ள வங்கி வாய்க்கால்கள் மூலமாக உள்முக அயல்நாட்டுப் பண அனுப்புதல் மூலமாகவோ, அல்லது கடன்

கொடுக்கும் குடியிருப்பாளரல்லாதவரின் NRE/FCNR கணக்கில் பற்று வைத்தோ கடன் தொகை பெறலாம்.

***<u>விளக்கம்:</u>***

கம்பெனி சட்டம் 1956ன் சட்டப்பிரிவு எண் 6ல் தரப்பட்டுள்ள ‘உறவினர்’ என்பதன் விளக்கம், நெருங்கிய உறவினர் என்பதற்குப் பொருந்தும்.

(ii) ‘‘மீண்டும் அனுப்பும் அடிப்படையில் குடியிருப்பாளரல்லாத இந்தியரிடம் இருந்து கடன் வாங்கும் திட்டம்’’ என்ற தலைப்பின் கீழ் அட்டவணையில் உள்ள சட்டவிதிக்கூறு (iv) விடுபட வேண்டியவை.

கையெழுத்திடப்பட்டது

K.J. உதேஷி
செயல் இயக்குநர்